# தஞ்சாவூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (19.10.2016 முதல் 23.10.2016 வரை)


**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை– 612 101**

போன்: 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in Fax: 0435 2472881


=================================================================

**தேதி:18.10.16**

**கடந்த 4 நாட்களில் நிலவிய வானிலை (14.10.2016– 17.10.2016)**

| காரணிகள் | கடந்த நாட்களில் வானிலை |
|---|---|
| மழை (மி.மீ.) | 1.3 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 34 – 35 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 27 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 5 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 66 – 76 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 3 – 4 |

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>19.10.2016 | நாள் 2<br>20.10.2016 | நாள் 2<br>21.10.2016 | நாள் 4<br>22.10.2016 | நாள் 5<br>23.10.2016 |
| மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 2 | 2 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 34 | 34 | 34 | 34 | 34 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 27 | 27 | 27 | 27 | 27 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 5 | 5 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 66 – 73 | 66 – 73 | 66 – 73 | 66 – 73 | 66 – 73 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 3 | 3 | 3 | 3 | 3 |
| காற்றின் திசை | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு |

19.10.2016 முதல் 23.10.2016 வரை வானம் மேகமூட்டத்துடன் இருள்சூழ்ந்து காணப்படும். ஏதிர்பார்க்கப்படும் மழை அளவு 2 மி.மீ.

***வேளாண் அறிவுரைகள் :***

**பயிர் : நெல்,உளுந்து,எள்,கரும்பு மற்றும் பருத்தி**

**பருவம் : பருவம் சம்பா : இளம் பயிர் தாளடி : நாற்றங்கால் மற்றும் நடவு**

- சம்பா நெற்பயிரில் மேலுரமாக ஏக்கருக்கு 30 கிலோ யூரியா மற்றும் 10 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் கலந்து வயலில் சீராக தூவவும்.

- தாளடி பருவ நெல் நடவு செய்யும் விவசாயிகள் 1 ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம், 10 கிலோ ஜிங்சல்பேட், 30 கிலோ யூரியா, 40 கிலோ டிஏபி மற்றும் 10 கிலோ பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இடவேண்டும். தாளடி நடவிற்கு முன் ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டு பூச்சி மற்றும் நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.

- சம்பா நெற்பயிரில் இலை சிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த டைக்கோபால் 600 மி.லி. / ஏக்கர் அல்லது நனையும் கந்தகத்தூள் 400 கிராம் / ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**இயக்குநர்**